புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | டிசம்பர் 02, 2021 | புரட்சி 20 | முழக்கம் 40 | விலை: ரூ.3.00

# சட்ட எரிப்புப் போராட்டம் நடத்திய நவம்பர் 26இல் தோழர்கள் – ஜாதி எதிர்ப்பு உறுதி ஏற்பு

1957 நவம்பர் 26ஆம் நாள் அரசியல் சட்டத்தை அரசியல் நிர்ணயசபை ஏற்ற நாளாகும். அதே சட்டம் மதத்தை அடிப்படை உரிமையாக்கி, அதன் வழியாக ஜாதி இழிவுகளைக் காப்பாற்றுவதற்குப் பாதுகாப்பான பிரிவுகளை உள்ளடக்கியிருந்தது. ஜாதி ஒழிப்புக்குத் தடையாக இருந்த சட்டத்தின் உட்பிரிவுகளான 13(2), 25(1), 26(1), 26(2) மற்றும் 368 பிரிவுகளை தீயிட்டுக் கொளுத்தும் போராட்டத்துக்கு பெரியார் 'நவம்பர் 27' அய் தான் தேர்வு செய்தார். ஒரு நாட்டின் அரசியல் சட்டப் பிரிவுகளையே 10,000 பேர் தீயிட்டுக் கொளுத்திய போராட்ட வரலாறு பெரியார் இயக்கத்துக்கு மட்டுமே உண்டு. சரியாக போராட்டத்திற்கு 24 நாட்களுக்கு முன் தஞ்சையில் நடந்த சிறப்பு மாநாட்டில் போராட்ட அறிவிப்பை பெரியார் அறிவித்தார். 6 மாதம் முதல் 2 ஆண்டுகள் வரை தோழர்கள் தண்டிக்கப்பட்டனர். தோழர்கள் எவரும் எதிர் வழக்காடவில்லை. 'சட்டத்தை எரித்தேன்; தண்டனை ஏற்கத் தயாராக உள்ளேன்' என்று நீதிமன்றத்தில் வாக்கு மூலம் தந்தனர். சிறைக்குள்ளேயே இரு தோழர்கள் மரணமடைந்தனர். விடுதலையாகி ஒரு மாதத்துக்குள் 18 பேர் சிறையின் மோசமான உணவால் உடல்நலம் பாதிக்கப்பட்டு மரணமடைந்தனர். அந்த நவம்பர் 26ஆம் நாளை திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் ஜாதி ஒழிப்புக்கான உறுதிமொழி ஏற்கும் நாளாக பல்வேறு ஊர்களில் நடத்தினர்.

**கள்ளக்குறிச்சியில் :** 26.11.2021 அன்று கள்ளக்குறிச்சி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் ஜாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்ட எரிப்புப் போராட்ட வரலாறுகளையும், தமிழ்நாட்டில் அந்தப் போராட்டம் ஏற்படுத்திய தாக்கங்களையும் மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற வகையில் ஒரு நாள் பிரச்சாரம் நடைபெற்றது. காலை 10 மணியளவில் மூங்கில் துறைப்பட்டு சர்க்கரை ஆலை அருகில் துவங்கிய பிரச்சாரம், பகல் 12 மணிக்கு - பகண்டை கூட்டு ரோடு ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில் நடைபெற்றது. மதிய உணவுக்குப் பிறகு மாலை 3 மணிக்கு சங்கராபுரம் பேரறிஞர் அண்ணா சிலை அருகிலும், மாலை 5 மணிக்கு கள்ளக்குறிச்சி அம்பேத்கர் சிலை அருகிலும் பிரச்சாரம் நடைபெற்றது. ஒரு நாள் பிரச்சாரத்தில் 2000 துண்டறிக்கைகள் தோழர்கள் மக்களிடத்தில் வழங்கினர்.

பிரச்சாரத்திற்கு மாவட்டக் கழக அமைப்பாளர் சி.சாமிதுரை தலைமை வகித்தார். தலைமைக்குழு உறுப்பினர் ந.அய்யனார் கருத்துரை வழங்கினார். மாவட்டத் துணைச் செயலாளர் மு.நாகராஜ், அறிவியல் மன்ற அமைப்பாளர் முருகன், ஒன்றிய அமைப்பாளர் இரா. கார்மேகம் உள்ளிட்ட முப்பது தோழர்கள் பிரச்சாரத்தில் பங்கேற்றனர். கள்ளக்குறிச்சியில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்டத் தலைவர் மதி, கல்லை ஆசைத்தம்பி, சங்கர், வெற்றிவேல், திருமால் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர். மா.குமார் நன்றி கூறினார். பொது மக்கள் ஆர்வத்துடன் துண்டறிக்கைகளை வாங்கிப் படித்ததுடன், இந்தப் போராட்டம் குறித்த கூடுதல் தகவல்களையும் கேட்டறிந்தனர்.

**மேட்டூரில் :** திராவிடர் விடுதலைக் கழகத்தின் மேட்டூர் நகரம் சார்பாக, ஜாதியை பாதுகாக்கும் அரசியல் சட்ட பிரிவுகளை எரித்து சிறை சென்று உயிர்நீத்த போராளிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் நிகழ்வு தெருமுனை கூட்டமாக மேட்டூர் சின்ன பார்க் திடலில் 26.11.2021 அன்று மாலை 5 மணியளவில் நடைபெற்றது.

கூட்டத்தின் முதல் நிகழ்வாக பறை முழக்கம், அதனை தொடர்ந்து ஜாதி ஒழிப்புப் பாடல்களும் பாடப்பட்டது. ஜாதி ஒழிப்புப் போராளிகளுக்கு வீர வணக்கக் கூட்டம் சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் சி.கோவிந்தராஜ் தலைமையில் தொடங்கியது.

கூட்டத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மேட்டூர் நகர செயலாளர் அப்துல் கபூர், மேட்டூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் சிவக்குமார்,

திராவிடப் பண்பாட்டு நடுவத்தின் பொறுப்பாளர் முல்லைவேந்தன், திராவிடர் விடுதலைக் கழகத் தலைமைக் குழு உறுப்பினர் அ.சக்திவேல் ஆகியோர் வீரவணக்க உரை நிகழ்த்தினார்கள்.

அதனை தொடர்ந்து தோழர் தேன்மொழி ஜாதி ஒழிப்பு உறுதிமொழி கூற தோழர்கள் அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். நிறைவாக நகர செயலாளர் பிரதாப் நன்றியுரை கூற தெருமுனைக் கூட்டம் மாலை 07.00 மணிக்கு நிறைவடைந்தது. கூட்டத்தில் பொதுமக்களுக்கு துண்டறிக்கை விநியோகிக்கப்பட்டது.

**கோவையில் :** ஜாதி ஒழிப்புக்காக 1957 நவம்பர் 26 அன்று சட்டத்தை எரித்து சிறை சென்று களப்பலியான போராளிகளுக்கு கோவை காந்திபுரம் பெரியார் சிலை முன்பு திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் கழகத் தோழர் வெங்கட் தலைமையில், இரஞ்சித் உறுதிமொழி வாசிக்க அனைத்து தோழர்களும் உறுதிமொழி ஏற்றனர். மாதவன் சங்கர் கலந்து கொண்ட அனைத்து தோழர்களுக்கும் நன்றி கூறினார்.

கலந்து கொண்ட அனைவருக்கும் ஜெகதீஷ் - கவிதா தேநீர் வழங்கினர்.

கலந்து கொண்ட தோழர்கள் : வெங்கட், இரஞ்சித், மாதவன் சங்கர், நிர்மல், நேருதாசு, கிருஷ்ணன், லோகு, சதீஷ், இராஜாமணி, மணிராஜ், அமிலா, கவிதா, புரட்சி தமிழன், இராமச்சந்திரன், எழிலரசன், ஜெகதீஷ், இராமகிருஷ்ணன், பிரகாஷ்.

**திருப்பூரில் :** நவம்பர் 26 1957-இல் தலைவர் தந்தை பெரியாரின் ஆணையை நேற்று தமிழ்நாடெங்கும் அரசியல் சட்ட பிரிவுகளை கொளுத்திய கொள்கை மறவர்களுக்கு வீரவணக்கம் செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

26.11.2021 அன்று, திருப்பூர் ஆத்துப்பாளையம் பகுதியில் மாநகரம் கழகம் சார்பாக ஆத்துப் பாளையம் திமுக அலுவலகம் முன்பு காலை 11 மணியளவில் வீரவணக்கம் செலுத்தப்பட்டது..

நிகழ்வில், கழகப் பிரச்சாரச் செயலாளர் பால் பிரபாகரன், கழகப் பொருளாளர் சந்தோஷ், தமிழ்நாடு மாணவர் கழகம் முகில்ராசு, மாவட்டத் தலைவர் தனபால், மாநகரத் தலைவர் முத்து, மாநகர் அமைப்பாளர் பரந்தாமன், மதன், அய்யப்பன், மாரிமுத்து கருப்பையா, திமுக சார்பில் - ரத்தினசாமி, திருப்பூர் மாவட்ட பாத்திர தொழிலாளர் சங்கம், சாமிநாதன் 10 வது வட்டக் கழகம் பொறுப்பாளர், ஆத்துப்பாளையம்- மணிமாறன், அய்யப்பன் திமுக ஆட்டோ ஓட்டுநர் சங்கம், மணிகண்டன் திமுக ஆட்டோ ஓட்டுநர் சங்கம், ஆறுச்சாமி திமுக திருப்பூர் மாநகரம், பார்த்திபன் திமுக பகுதி இளைஞரணி அமைப்பாளர், பூபதி ஆத்துப் பாளையம் திராவிட முன்னேற்றக் கழகம், சரவணனன், ஆத்துப் பாளையம். பெரியார் பிஞ்சுகள் யாழினி, யாழிசை உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டார்கள்.

**சென்னையில் :** ஜாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவுகளை, பெரியாரின் கருஞ்சட்டை தோழர்கள் எரித்து சிறை சென்ற நாள். 1957 நவம்பர் 26 ஆம் நாள்.

சட்ட எரிப்பு நாளை நினைவு கூறும் வகையில், இன்று காலை 10 மணியளவில், மந்தைவெளி பெரியார் படிப்பகம் அருகில், மாவட்ட துணை செயலாளர் சுகுமார் தலைமையில் நடைபெற்றது. சட்ட எரிப்பு போராளிகளை நினைவு கூறும் வகையில் முழக்கங்கள் எழுப்பப்பட்டது. சுகுமார் சட்ட எரிப்பு நாள் உறுதிமொழியை கூற தோழர்கள் உறுதிமொழி எடுத்தனர்.

அதைத் தொடர்ந்து இராயப்பேட்டை வி.எம் தெரு பெரியார் படிப்பகத்திலும், மமுழக்கம் எழுப்பப்பட்டு ஜாதி ஒழிப்பு உறுதி மொழி எடுக்கப்பட்டது.

நிகழ்வில், சென்னை மாவட்டத் தலைவர் வேழவேந்தன், மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, மயிலை சுகுமார், இராவணன், மனோகர், சிவா உள்ளிட்ட தோழர்களுடன் சென்னை கழகத் தோழர்களும் கலந்து கொண்டனர்.

# கொளத்தூர் – புலியூரில் எழுச்சியுடன் நடந்த மாவீரர் நாள்

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் களமாடி உயிர்த் தியாகம் செய்த மாவீரர்களுக்கு வீர வணக்கம் செலுத்தும் நிகழ்வு நவம்பர் 27 அன்று கொளத்தூர் அருகே புலியூர் செல்லும் வழியில் அய்யம்புதூர் அன்னை கனகாம்பாள் திருமண மண்டபத்தில் நடந்தது. விடுதலைப் புலிகள் இராணுவப் பயிற்சி எடுத்த இடத்தின் அருகே திறந்தவெளியில் முகாமுக்கு தலைமையேற்று பயிற்சி யளித்து வீரமரணமடைந்த பொன்னம்மான் நினைவாக அமைக்கப்பட்ட புலியூர் 'நிழற்குடை' அருகே இதுவரை இந்த நிகழ்வு நடந்து வந்தது. மழை காரணமாக அருகே உள்ள திருமண மண்டபத்தில் இந்த ஆண்டு நிகழ்வு நடைபெற்றது.

திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள், தமிழர் வாழ்வுரிமைக் கட்சித் தோழர்கள் 2000 பேர் திரண்டிருந்தனர். உலகம் முழுதும் 6.05 மணிக்கு நிகழ்வு நடத்தப்படுவதையொட்டி அதே நேரத்தில் மாவீரர் வீரவணக்கப் பாடல் ஒலிக்கப்பட்டது. தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான தி.வேல்முருகன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, மாவீரர் சுடரை ஏற்றினார். தொடர்ந்து குழந்தைகள் முதல் பெண்கள், இளையோர், முதியவர் என்று நீண்ட வரிசையில் நின்று வீரவணக்கம் செலுத்தினர்.



7 மணியளவில் கருத்தரங்கம் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் தொடங்கியது. சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் சூரிய குமார் வரவேற்புரை நிகழ்த்தினார். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரனைத் தொடர்ந்து தி.வேல்முருகன் ஒரு மணி நேரம் நிறைவுரையாற்றினார். பங்கேற்ற 2000 பேருக்கும் இரவு உணவை கழகத் தோழர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். அரங்கம் நிரம்பி வழிந்து அரங்கிற்கு வெளியே அரங்கில் உள்ளதைப் போல இரு மடங்கு கூட்டம் கூடியிருந்தது.

**(நிகழ்வில் நூல் வெளியீடு – செய்தி உள்ளே)**

**தலையங்கம்**

# அய்.அய்.டி.களில் தொடரும் ‘மனு தர்மம்’

நாட்டின் உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனமான ‘அய்.அய்.டி.’கள், பார்ப்பன ஆதிக்கத்தில் சிக்கி, ‘மனு தர்மத்தை’ அறிவிக்கப்படாத சட்டமாக பின்பற்றி வருகிறது. கடும் போராட்டத்துக்குப் பிறகு மாணவர், ஆசிரியர் தேர்வுகளில் 27 சதவீதம், 22.5 சதவீதம் இடஒதுக்கீட்டைப் பின்பற்ற சட்டம் இயற்றிய பிறகும், பார்ப்பன நிர்வாகம் இடஒதுக்கீட்டை முழுமையாகப் பின்பற்றாததோடு, நிறுவனம் நடத்தும் ‘தகுதி’க்கான தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருந்தாலும் அற்பக் காரணங்களுக்காக படிப்பைத் தொடர விடாமல் தடுத்து விடுகிறது. 1996 முதல் 2000 வரை சென்னை அய்.அய்.டி.யின் பார்ப்பன மேலாதிக்கத்தை எதிர்த்து பெரியார் திராவிடர் கழகம் தொடர் போராட்டங்களை நடத்தி, அங்கே நடக்கும் ‘பாகுபாடு’களை பார்ப்பனியத்தை பொது வெளிக்கு வெளிச்சப்படுத்தியது.

கடந்த நவம்பர் 24, 2021 அன்று உச்சநீதிமன்றம் அய்.அய்.டி.களில் இடஒதுக்கீட்டைப் பின்பற்றப் படாததை எதிர்த்து தொடரப்பட்ட ஒரு பொது நல வழக்கை விசாரணைக்கு ஏற்றுள்ளது. குறிப்பாக ஆய்வுப் படிப்புகளில் பட்டியல் இனப் பழங்குடி மாணவர்களுக்கான ஒதுக்கீடுகள் மறுக்கப்படுகின்றன. நாடு முழுதும் உள்ள 23 அய்.அய்.டி. களுக்கும் ஒன்றிய அரசுக்கும் மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வு விளக்கம் கேட்டு தாக்கீது பிறப்பித்துள்ளது. ஆசிரியர் நியமனங்கள் மாணவர் சேர்க்கையில் வெளிப்படைத் தன்மை வேண்டும். பேராசிரியர்கள் பணியாற்றும் திறன் குறித்து மதிப்பீடுகள் வேண்டும் என்ற மனுதாரரின் கோரிக்கைகளை உச்சநீதிமன்றம் ஏற்க மறுத்து விட்டதோடு அது நிர்வாகம் தொடர்பானது என்றும் இடஒதுக்கீடு பிரச்சினையை மட்டுமே நீதிமன்றம் பரிசீலிக்கும் என்றும் கூறி விட்டது.

அய்.அய்.டி.யில் சமூகத் தடைகளைக் கடந்து இடம் பிடித்த ஒரு இளம் ‘தலித்’ மாணவரால் கல்விக் கட்டணத்தை செலுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டது. அதற்குக் காரணம் பணம் செலுத்திய வங்கியில் நடந்த தொழில்நுட்பக் கோளாறுதான். ஆனால், அய்.அய்.டி. நிர்வாகம் உரிய நேரத்தில் கல்விக் கட்டணம் செலுத்தவில்லை என்று காரணம் கூறி மாணவரை சேர்க்க மறுத்து விட்டது. இப்படி ஒடுக்கப்பட்ட சமூகத்தின் விளிம்பு நிலையிலிருந்து வரும் மாணவர்கள், தேர்ச்சி பெற்றும் கட்டணம் செலுத்த முடியாத நிலையில் படிப்பைத் தொடர முடியவில்லை என்றும், தெலுங்கானா மாநிலத்தில் இந்த எண்ணிக்கை அதிகம் என்றும் ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு (நவம், 25, 2021) செய்தி வெளியிட்டுள்ளது.

‘அய்.பி.எம்.’ எனும் உயர் தொழில்நுட்பப் பட்டப் படிப்பில் உரிய தேர்வுகளில் தேர்ச்சி பெற்று பி. திவ்யா வாணி இடம் பிடித்தார். இப்படி தேர்ச்சி பெற்ற பிறகும் அய்.அய்.எம்., என்.அய்.டி. போன்ற படிப்புகளுக்கு நிர்வாகம் 6 மாத பயிற்சி ஒன்றை நடத்தி, அதிலும் வடிகட்டுகிறது. அதில் தேர்ச்சி பெற்ற பிறகும் உரிய கட்டணம் செலுத்த முடியாத நிலையில் மாணவர்கள் சேர முடியாமல் வாய்ப்புகளை இழந்து நிற்கின்றனர். அவர்களில் ஒருவர் தான் பி. திவ்யா வாணி. மாணவியின் தந்தை ஒரு லாரி ஓட்டுனர். படிப்புக்காக அவரால் ரூ.30 இலட்சம் வரை தான் திரட்ட முடிந்தது. அது போதாமையால் ‘பி.காம்.’ பட்டப் படிப்பில் தெலுங்கானாவில் ஒரு தனியார் கல்லூரியில் சேர்த்துள்ளார். இதேபோல் சுமார் 40 தலித் மாணவ மாணவியர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அந்த ஆங்கில நாளேடு எழுதியுள்ளது.

இந்த நிலையில் உயர்ஜாதி ‘ஏழை’களுக்கென்று ஒன்றிய ஆட்சி கொண்டு வந்த சமூக நீதிக்கு எதிரான 10 சதவீத இடஒதுக்கீட்டுக்கு ஆண்டு வருமானம் ரூ.8 இலட்சம் என்று வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதே வரம்பு தான் பிற்படுத்தப்பட்டோருக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உச்சநீதிமன்றமே இந்த ‘பாகுபாட்டை’ சுட்டிக் காட்டி ஒன்றிய ஆட்சியிடம் விளக்கம் கேட்டுள்ளது.

இடஒதுக்கீட்டுக்கான சட்டங்கள் இருந்தாலும் அதை முறையாக செயல்படுத்தாமல் முட்டுக்கட்டைப் போடுகிறது பார்ப்பன அதிகார வர்க்கம். ஒரு ‘எல்லைக்கு மேல்’ இடஒதுக்கீட்டின் பயன்கள் கிடைத்து விடக் கூடாது. உச்சகட்ட அதிகாரமிக்க பதவிகளுக்கும் அதேபோல உயர்மட்ட ஆய்வு படிப்புகளுக்கும் வந்து விடக்கூடாது என்பதில் இவர்கள் உறுதி காட்டுகிறார்கள். ‘ஏறி வரும் ஏணியை எட்டி உதைக்கும்’ இந்த நயவஞ்சகத்துக்கு முற்றுப் புள்ளி வைக்கா விட்டால் இடஒதுக்கீடு என்ற சமூக நீதியின் நோக்கம் முழுமை பெற முடியாது.

எனவே சமூக நீதியைக் குலைக்க கொல்லைப் புறமாக பின்பற்றப்படும் முட்டுக்கட்டைகள் மீது உரிய கவனம் செலுத்தி தடைகளை நீக்குவதற்கான விழிப்புணர்வை சமூகத்தில் உருவாக்குவதோடு ஒன்றிய ஆட்சிக்கு அழுத்தம் தரப்பட வேண்டியது அவசியம்.

# ‘ஈழ விடுதலையும் திராவிடர் இயக்கங்களும்’ – மாவீரர் நாளில் நூல் வெளியீடு




புலியூரில் நடந்த மாவீரர் நாளில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி எழுதிய ‘ஈழ விடுதலையும் திராவிடர் இயக்கங்களும்’ நூல் வெளியீட்டு நிகழ்வு நடைபெற்றது. தமிழர் வாழ்வுரிமைக் கட்சி நிறுவனர் தி. வேல் முருகன் வெளியிட கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பெற்றுக் கொண்டார். ‘நன்செய் பிரசுரம்’ குறைந்த விலையில் ரூ.10/-க்கு நூலை வெளியிட்டுள்ளது. நிகழ்வுக்கு 800 பிரதிகள் மட்டுமே விற்பனைக்குக் கொண்டு வரப்பட்டன. அனைத்து நூல்களுமே விற்றுத் தீர்ந்து விட்டன. வெளியீட்டாளர் கவிஞர் தம்பி நிகழ்வில் பங்கேற்றார்.

நூலைப் பெற : 9566331195 / 7373684049

# சின்மயா வித்யாலயா பள்ளி ஆசிரியர் – முதல்வர் கைது கோரி போராட்டம் : கழகம் பங்கேற்பு

கோவை கோட்டைமேடு சின்மயா வித்யாலயா பள்ளி 12ஆம் வகுப்பு மாணவி, ஆசிரியர் மிதுன் சக்கரவர்த்தியின் பாலியல் துன்புறுத்தலால் தற்கொலை செய்து கொண்டார். ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார். பள்ளியின் முதல்வர் மீரா ஜாக்சனிடமும் இது குறித்து புகார் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்காமல், மாணவிக்கு மனநல ஆலோசனைகளுக்கு ஏற்பாடு செய்துள்ளார். முதல்வரையும் கைது செய்யக் கோரி மாணவர்கள் போராட்டம் நடத்தியதைத் தொடர்ந்து அவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆசிரியரையும் முதல்வரையும் கைது செய்யக் கோரி பள்ளி முன்பு பல்வேறு முற்போக்கு இயக்கங்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்துக்குப் பிறகே ஆசிரியரும், முதல்வரும் கைது செய்யப்பட்டனர். மாவட்ட ஆட்சித் தலைவர் போராடிய அமைப்பினரிடம் நேரடியாக வந்து குடும்பத்துக்கு இழப்பீடு, குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை என்று உறுதியளித்துள்ளார். போராட்டத்தில் கோவை தி.வி.க. தோழர்களும் தமிழ்நாடு மாணவர் கழக சார்பில் சந்தோஷ் உள்ளிட்ட தோழர்களும், த.பெ.தி.க. பொதுச் செயலாளர் கோவை இராமகிருஷ்ணன் உள்ளிட்ட தோழர்கள், எஸ்.டி.பி.அய். உள்ளிட்ட அமைப்பினரும் பங்கேற்றனர்.

# மதுரை மாவட்ட கழகம் சார்பில் மாவீரர் நாள்

மதுரை மாவட்ட திவிக சார்பில் மாவீரர் நாள் நிகழ்வு பத்திரிக்கையாளர் அரங்கில் 27.11.2021 அன்று மாலை 6 மணியளவில் நடத்தப்பட்டது. இந்த நிகழ்விற்கு மாநகர் தலைவர் திலீபன் செந்தில் தலைமை தாங்கினார்.


மாவட்ட கழகக் காப்பாளர் தளபதி மற்றும் மாவட்ட தலைவர் காமாட்சி பாண்டி முன்னிலை வகித்தனர். வேலு ஆசான் பறை இசை குழுவினரின் பறையாட்டத்துடன் நிகழ்ச்சி தொடங்கியது.

கழக அமைப்புச் செயலாளர் ரத்தினசாமி, விடுதலைச் சிறுத்தைகள் மாநில துணை பொது செயலாளர் வெ.கனியமுதன், தமிழ்தேச மக்கள் முன்னணித் தலைவர் மீ.த.பாண்டியன் ஆகியோர் - மாவீரர் சுடரேற்றி மாவீரர் உரை நிகழ்த்தினர்.

ஈழப் போராட்டத்தில் பெரியார் இயக்கத்தின் பங்கை மாநில அமைப்புச் செயலாளர் ரத்தினசாமி எடுத்துரைத்தார்.

மதிமுக, தமிழ் புலிகள் கட்சி, தமிழக வாழ்வுரிமை கட்சி, மே 17 இயக்கம், விடுதலை சிறுத்தைகள், மக்கள் பாதை, தமுமுக உள்ளிட்ட 15 க்கும் மேற்பட்ட தோழமை அமைப்பு மாநில, மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## தமிழ்ப் பண்டிதர்களுக்கு சில வார்த்தைகள்



தமிழ்ப் பண்டிதர்களுக்கும் தமிழபிமானிகளுக்கும் சில வார்த்தைகளை கூற விரும்புகிறோம்.

சுயமரியாதைத் தோழர்கள், தமிழ் மொழி வளர்ச்சி விஷயத்தில் எந்த வகையிலும் மற்ற பண்டிதர்களுக்கும் தமிழ் அபிமானிகளுக்கும் பிற்பட்டவர் அல்லர் என்று தெரிவித்துக் கொள்கிறோம். இதற்கு சுயமரியாதைத் தோழர்கள் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டதும், தமிழ் வளர்ச்சிக்கான தீர்மானங்களிலும் முக்கியப் பங்கு எடுத்துக் கொண்டதுமே உதாரணமாகும். உண்மையில் ஹிந்தி மொழியைக் கண்டிப்பதாக மாநாட்டில் மெஜாரிட்டியினரால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் சுயமரியாதைத் தோழர்கள் இல்லாவிட்டால் தோற்றே போயிருக்கும். ஹிந்தி கண்டன தீர்மானத்தைச் சிலர் எதிர்த்த பொழுது, அவ்வெதிர்ப்புக்குச் சரியான பதில் கூறினர். ஹிந்தி கூடாது என்பதைப் பெரிய மெஜாரிட்டியாரை ஒப்புக்கொள்ளச் செய்தவர்கள் சுயமரியாதைத் தோழர்களே யாவார்கள் என்பதை நாம் கூற வேண்டியதில்லை.

ஆனால் மற்ற பண்டிதர்களில் மற்றவர்கள் விரும்புவது போல் புராணங்களை எழுதுவதும், அவைகளைப் பற்றி பேசுவதும், தேவார திருவாசங்களைப் பாடுவதும் தான் தமிழ் வளர்ச்சி என்று சுயமரியாதைத் தோழர்கள் கருதுவதில்லை.

மக்களுடைய வாழ்க்கைக்குப் பயன்படக்கூடியதும், அறிவையும் திறமையையும் தைரியத்தையும் உண்டாக்கக் கூடியதும் ஆகிய சிறந்த கலைகளையெல்லாம் தமிழில் எழுதிப் பரவச் செய்வதின் மூலம் மக்களுடைய அறிவையும் தமிழ் மொழியையும் செம்மை செய்வதே தமிழ் வளர்ச்சி என்று கருதியிருப்பவர்கள் என்று கூறுகிறோம். இதுதான் உண்மையான தமிழ் வளர்ச்சிக்கான வழியுமாகும்.

**– குடிஅரசு 14.08.1932**

# கார்ப்பரேட் நிறுவனங்களைக் காப்பாற்றச் சட்டங்கள்

**விடுதலை இராசேந்திரன்**

***பிரிட்டிஷ் ஆட்சி – காங்கிரஸ் ஆட்சி காலங்களில் தமிழர் உரிமைகள் பறிக்கப்பட்ட வரலாறு களைத் தொடர்ந்து இத்தொடரில் – அதைவிட மோசமாக பா.ஜ.க. ஆட்சியின் ‘இருண்டகால’ வரலாற்றை சுருக்கமாகப் பார்ப்போம்.***

2017 பிப்ரவரி மாதம் நாடாளுமன்றத்தில் நிதியமைச்சர் அருண் ஜெட்லி தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கைக்கு நாடாளுமன்றத்தில் ஏற்பு வாங்கப்பட்டபோது, கடைசி நேரத்தில் 40 திருத்தங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றி விட்டார்கள். இந்த திருத்தங்களை மாநிலங் களவைக்கே கொண்டு செல்லவில்லை. நிதி தொடர்பான மசோதாக் களுக்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதல் மட்டுமே போதுமானது என்ற சட்டம் தந்துள்ள வாய்ப்பை இப்படி குறுக்கு வழியில் முறை கேடாகப் பயன்படுத்தியிருக்கிறது மோடி ஆட்சி.

இந்த திருத்தங்களில் ஒன்று - வருமான வரித் துறை அதிகாரிகளுக்கு வழங்கப்படும் எல்லை மீறிய அதிகாரங்களாகும். நடுவண் ஆட்சி, அரசியல் எதிரிகளை ஒழிப்பதற்குப் பயன்படுத்தும் வலிமையான அதிகார அமைப்புகளில் ஒன்று வருமான வரித் துறை. புதிய திருத்தத்தின்படி, இனி வருமான வரித் துறை அதிகாரிகள், தேவையான ஆதாரங்கள், தடயங்கள் இல்லாமல், சந்தேகத்தின் அடிப்படையிலேயே சோதனையிடவும், சொத்து களைப் பறிமுதல் செய்யவும் உரிமை வழங்கப்பட் டிருக்கிறது. சோதனையிடப்படு வதற்கான காரணங்களை மேல்முறையீட்டு தீர்ப்பாயம் உள்ளிட்ட எந்த அமைப்புக்கும் அதிகாரிகள் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. பார்ப்பன அதிகார மய்யமாக திகழும் வருமானவரித் துறையை ‘ஒரு இராணுவ சர்வாதிகாரி’ போல செயல்படு வதற்கான அதிகார அமைப்பாக்கிவிட்டார்கள். அந்த அதிகாரம்தான் இப்போது எதிர்கட்சிகளை அச்சுறுத்தப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மோடி குஜராத் முதல்வராக இருந்தபோது ‘சகாரா’, ‘ஆதித்யா பிர்லா’ குடும்பங்களில் வருமான வரித்துறை நடத்திய சோதனைகளில் மோடிக்கு நன்கொடை தந்ததற்கான ஆவணங்கள் கைப்பற்றப் பட்டு, அந்த ஆதாரங்கள் வருமான வரித்துறையின் பதிவேடுகளிலேயே இடம் பெற்றிருந்ததை சுட்டிக்காட்டி நடவடிக்கைக் கோரி உச்சநீதிமன்ற வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் ஆதாரங்களோடு வழக்கு தொடர்ந்தார். மோடி மீது நடவடிக்கை எடுக்காமல் இருந்ததற்காகவே, வருமான வரித் துறை அதிகாரியாக இருந்த கே.பி. சவுத்திரி என்பவருக்கு, இலஞ்ச ஒழிப்புத் துறைத் தலைவர் என்ற உயர்ந்த பதவி பரிசாக அளிக்கப்பட்டதையும் பிரசாந்த் பூஷன் சுட்டிக் காட்டியிருந்தார்.

மற்றொரு முக்கிய திருத்தமும் கொண்டு வரப்பட்டது. கார்ப்பரேட் கம்பெனிகள் இனி அரசியல் கட்சிகளுக்கு நன்கொடைகளை வழங்குவதற்கு உச்சவரம்பு எதுவும் கிடையாது என்பதே இந்த புதிய திருத்தம். தற்போதுள்ள சட்டத்தின்படி ஒரு கார்ப்பரேட் நிறுவனம் தனது நிகர இலாபத்தில் 7.5. சதவீத அளவில் மட்டுமே அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை வழங்க முடியும். அது மட்டுமின்றி வழங்கப்பட்ட தொகை, வழங்கிய கட்சிகளின் பெயர்களையும் அறிவித்தாக வேண்டும். இப்போது வரம்பு நீக்கப்பட்டதோடு வழங்கிய கட்சிகளின் பெயர்களையும் வெளியிடத் தேவை இல்லை என்கிறது புதிய திருத்தம். ஏற்கெனவே அரசியல் கட்சிகள் கார்ப்பரேட் நிறுவனங்களின் பிடிக்குள் வந்துவிட்டன. கார்ப்பரேட் நிறுவனங்களோ பார்ப்பன அதிகார வர்க்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றன. அதை மேலும் உறுதிப்படுத்தி யிருக்கிறது மோடி ஆட்சி. ஸ்டேட் வங்கி மூலம் பத்திரங்கள் வழியாக நன்கொடை வழங்கலாம் எனும் இத்திட்டத்தின் கீழ் வெளிநாட்டு நிறுவனங்கள் தொழிலதிபர்கள் - 1000 கோடி மதிப்பிலான பத்திரத்தை பா.ஜ.க.வுக்கு வழங்கி யிருப்பது ஆர்.டி.அய். மூலம் வெளி வந்திருக்கிறது. இலஞ்சத்துக்கு கதவு திறந்துவிடும் பா.ஜ.க.வுக்கு அரசியல் ஊழல்களைப் பற்றிப் பேச என்ன தார்மீக உரிமை இருக்கிறது என்று கேட்கிறோம்.

மற்றொரு திருத்தம் - தீர்ப்பாயங்களை முடக்கி யிருப்பதாகும். இந்தத் தீர்ப்பாயங்கள் நீதித் துறைக் குரிய அதிகாரங்களுடன் செயல் படக்கூடிய அமைப்புகள். அரசின் தலையீடு களுக்கு இதில் இடமில்லை. நீதிமன்ற ஆணைப்படி உருவாக்கப் பட்ட தீர்ப்பாயங்களும் உண்டு. தீர்ப்பாயங்களுக்கு தலைவர்கள், உறுப்பினர்கள், அரசு நிர்வாக அமைப்புகளுக்கு அப்பாற்பட்டவர்கள் என்று உச்சநீதிமன்றம் 2014இல் திட்டவட்டமாக கூறியிருக் கிறது. ஆட்சியாளர்களையே சம்மன் செய்து விசாரிக்கும் உரிமை கொண்டவை. இப்போது தேவையில்லை என்று ஆட்சியாளர் விரும்புகிற தீர்ப்பாயங்களை கலைக்கவும், சில தீர்ப்பாயங்களின் தனித்துவமான உரிமைகளைப் பறித்து, வேறு சில வற்றுடன் இணைக்கவும் சட்டத்தைத் திருத்தி யிருக்கிறார்கள்.

வரி, அரசு வாங்கும் கடன், அரசு செல வினங்கள், கடன் பத்திரங்கள் போன்ற அம்சங்கள் மட்டுமே நிதி மசோதாவின் கீழ் வரக்கூடியவை. மோடி ஆட்சி, வருமான வரித் துறை, கார்ப்பரேட் கம்பெனிகள் சட்டம், தீர்ப்பாயங்கள் போன்றவற்றையும் நிதி மசோதாவுடன் இணைத்து மாநிலங்களவை விவாதத்துக்கு உட்படுத்தாமல் 40 திருத்தங்களை செய்திருப்பது மிகப் பெரும் ஜனநாயகப் படு கொலை.

2021 நவம்பரில் நாடாளுமன்றம் கூட இருக்கும் இரு வாரங்களுக்கு முன்பு அமுலாக்கத் துறை இயக்குநர், சி.பி.அய். இயக்குநர்களின் பதவிக் காலத்தை 45 ஆண்டுகளாக நீட்டித்து ஒன்றிய ஆட்சி அவசர சட்டம் பிரகடனம் செய்தது. குறிப்பாக சஞ்சய் கிரண் மிஸ்ராவுக்கு பதவி நீட்டிப்பு வழங்கக் கூடாது என்று உச்சநீதிமன்றம் செப்டம்பரில் உத்தரவிட்ட பிறகும் அவர் பதவி ஓய்வு பெறும் நிலையில் அவருக்கு அனைத்து அதிகாரத்துடன் பதவிக் கால வரம்பை நீட்டித்துள்ளது ஒன்றிய ஆட்சி.

மாநிலங்களின் உரிமைகளை பறிப்பது மட்டுமின்றி, மாநிலங்களின் அவையையும் முடக்கி விட்டார்கள். ஒற்றை ஆட்சி ஒற்றை கலாச்சாரம் எனும் இந்துத்துவா ஆயுதத்தை மக்களுக்கு எதிராக கூர் தீட்டி வருகிறது மோடி ஆட்சி.

**சிந்தனையாளர்கள் மீது அடக்குமுறைகள் :** புனேயில் உள்ள பீமா கொரேகான் என்னுமிடத்தில் பேஷ்வா அரசுப் படைகளை ஆங்கிலேயப் படை களுடன் தலித் படைவீரர்கள் வீழ்த்திய நினைவுச் சின்னம் ஒன்று உள்ளது. நூறாண்டுகளுக்கு முன் 1917 டிச 31 அன்று அண்ணல் அம்பேத்கர் அஞ்சலி செய்த நினைவுச் சின்னம் அது. சென்ற 2017 டிசம்பர் 31 அன்று தலித்கள் மற்றும் பொதுமைச் சிந்தனை உடையவர்கள் அங்கு கூடி ‘எட்கார் பரிஷத்’ எனும் நிகழ்ச்சியை நடத்தினர். பேஷ்வா அரசை எதிர்த்து தலித் படை ஒன்று வெற்றிபெற்றதைக் கொண் டாடிய இந்த நிகழ்வில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பினர் புகுந்து குழப்பம் விளைவித்தனர்.

இந்த வெற்றிக் கொண்டாட்ட நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ததில் மாவோயிஸ்டுகளின் பங்கு இருந்ததாகச் சொல்லி சென்ற ஜூன் 2018இல் சுரேந்திரா காட்லிங், சுதிர் தவாலே, பேராசிரியை ஷோமாசென், மகேஷ் ராவத், ரோனா வில்சன் முதலான தலித் மற்றும் மனித உரிமைச் செயல் பாட்டாளர்களை மகாராஷ்டிர அரசு கைது செய்தது. அவர்கள் இன்று ‘சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின்’ (UAPA) கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அந்தக் கைதைக் கண்டித்த செயல்பாட்டாளர் களான வழக்குரைஞரும் பி.யூ.சி.எல் அமைப்பின் தேசியத் தலைவருமான சுதா பரத்வாஜ், எழுத்தாளரும் மனித உரிமைப் போராளியுமான கௌதம் நவ்லக்கா. தலித் அறிவுஜீவியும் எழுத்தாள ருமான ஆனந்த் டெல்டும்டே, செயல்பாட்டாளர் சூசன் ஆப்ரஹாம், ஜார்கன்டில் பழங்குடி மக்கள் மத்தியில் வேலை செய்யும் திருச்சியைச் சேர்ந்த பாதிரியார் ஸ்டான் சாமி, ஆந்திரக் கவிஞர் வரவர ராவ், வழக்குரைஞர் அருண் ஃபெரெய்ரா ஆகியோரது வீடுகள் ஆக. 28, 2018 அன்று சோதனை இடப் பட்டது. இவர்களில் சிலரும் பின்னர் கைது செய்யப்பட்டனர்.

இப்படி எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள், மனித உரிமைப் போராளிகள் முதலானோர் கொடும் தடுப்புக் காவல் சட்டங்களில் கைது செய்யப்படுவதை உலகளவில் அறிவுஜீவிகள் கண்டித்தனர்.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சுதா பரத்வாஜ், கவுதம் நவ்லக்கா, வெர்னான் கோன்சால்வ்ஸ், அருண் ஃபெரெய்ரா, வரவரராவ் ஆகிய ஐவர் மீதும் தொடுக்கப்பட்டுள்ள வழக்கைத் தகர்த்து அவர்களை உடன் விடுதலை செய்யச் சொல்லி உலக அளவில் புகழ்பெற்ற வரலாற்று அறிஞர் ரொமிலாதாபர் மற்றும் பொருளியல் வல்லுனர் பேரா பிரபாதப் பட்நாயக், மூத்த பொருளியல் அறிஞர் தேவகி ஜெயின், காமன்வெல்த் மனித உரிமை அமைப்பின் மூத்த ஆலோசகர் மாஜா தாருவாலா ஆகியோர் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவை சென்ற செப்டம்பர் 2018இல் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா தலைமையிலான மூன்று நீதிபதிகள் அமர்வு தள்ளுபடி செய்தது. அது மட்டுமல்ல மகாராஷ்டிர காவல்துறை இதை விசாரணை செய்தால் இவ்வழக்கில் நீதி கிடைக்காது என்பதால் ஒரு சிறப்பு விசாரணைக் குழு (SIT) அமைக்க வேண்டும் என்கிற இவ் அறிஞர்களின் கோரிக்கையையும் அது தூக்கி எறிந்தது.

**வேளாண் சட்டங்கள் :** மாநில உரிமைப் பட்டியலில் இடம் பெற்றுள்ள விவசாய உரிமைகளை ஒன்றிய அரசு பறித்து 3 வேளாண் சட்டங்களை கொண்டு வந்து நிறைவேற்றியது.

விவசாயிகள் ஓராண்டு காலம் டெல்லியில் போரா டினார்கள். 750 பேர் பலியானார்கள். இறுதியாக விவசாயிகளில் ஒரு பிரிவினருக்கு சட்டத்தின் நன்மையை புரிய வைக்க முடியவில்லை என்று கூறி, 2021 நவம்பதில் குருநானக் பிறந்த நாளில் பிரதமர் மோடி சட்டத்தைத் திரும்பப் பெறுவதாக அறிவித்தார்.

**‘நீட்’ திணிப்பு :** கல்வி உரிமையை மாநிலங்களி டமிருந்து பறித்து, பா.ஜ.க. ஆட்சி கொண்டு வந்த ‘நீட்’ தேர்வு நாடு முழுதும் ஒரே தேர்வுக்கு வழிவகுத்து தமிழகத்தில் கட்டி எழுப்பப்பட்ட சமூகநீதியைத் தகர்த்து விட்டது. 31.1.2019இல் தமிழக சட்டசபையில் நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டுக்கு விலக்கு கோரும் தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டது பா.ஜ.க. ஆட்சி. அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கான குறைந்தபட்ச இடங்களை உறுதி செய்து, 7.5 சதவீத உள்ஒதுக்கீடு கோரும் சட்டத்துக்கும் ஒப்புதல் தராமல் காலம் தாழ்த்திய ஆளுநர், தமிழக அரசு அரசாணை வெளியிட்ட பிறகு வேறு வழியின்றி ஒப்புதல் தந்தார். மாநில கல்வி உரிமையை தனதாக்கிக் கொண்டது ஒன்றிய ஆட்சி.

**ஜி.எஸ்.டி. :** மாநிலங்களின் வரிவிதிப்பு உரிமையைப் பறிக்கும் ஜி.எஸ்.டி. வரி வருவாய் முறையை அமுல்படுத்தி மாநிலங்களுக்கு தருவதாக உறுதியளித்த இழப்பீடு தொகையையும் தர மறுக்கிறது நடுவண் ஆட்சி.

**ஜம்மு-காஷ்மீர் :** ஜம்மு-காஷ்மீர் மாநில மக்களுக்கு அரசியல் சட்டம் உறுதி செய்த 370ஆவது பிரிவின் கீழ் உறுதி செய்த தனி சிறப்புரிமைகளைப் பறித்து மாநில உரிமையை கூட தர மறுத்து விட்டார்கள். இராணுவத்தின் பிடியில் அங்கே ஆட்சி நடக்கிறது.

**தேசிய கல்விக் கொள்கை :** நாடு முழுதும் ஒரே கல்வி கொள்கை என்ற பெயரில் சமஸ்கிருதத்தையும் இந்தியையும் திணிப்பதோடு 5ஆம் வகுப்பு, 3ஆம் வகுப்பு, 8ஆம் வகுப்பு, 12ஆம் வகுப்புகளில் தேர்வுகளை வைத்து மாணவர்களை கல்வி அமைப்பிலிருந்து வடிகட்டி வெளியேற்றி, குலக் கல்விக்கு வழி வகுக்கும் ஒரு கல்வித் திட்டத்தைத் திணித்து விட்டார்கள்.

**குடியுரிமை சட்டம் :** குடியுரிமை சட்டத்திலும் மத அடையாளத்தைத் திணித்து ‘குடிமக்கள்’ மதச் சார்பற்றவர்கள் என்ற நிலையை மாற்றி மதத்தின் அடையாளத்தைத் திணித்து பாகுபடுத்தி விட்டது. 2019ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மூன்றே நாட்களில் மக்களவை, மாநிலங்களவை ஒப்புதலோடு குடியரசுத் தலைவரின் அனுமதி பெற்று சட்டமாக்கி விட்டார்கள். அதாவது 2014ஆம் ஆண்டு வரை இந்தியாவுக்குள் அடைக்கலம் தேடி பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் நாடுகளிலிருந்து வந்த முஸ்லிம் அல்லாத 6 மாதப் பிரிவினருக்கு மட்டும் குடியுரிமை வழங்கப்படும் என்று சட்டம் கூறுகிறது. குடியுரிமைக்கு மதத்தை ஒரு அடையாளமாக்கும் மனித விரோத சட்டம் இது.

ஆரியர் வருகைக்கு முன்பே தமிழர் நாகரிகம் இங்கே இருந்ததற்கான ஆதிச்ச நல்லூர் ஆய்வு முடிவுகளை வெளியிட மறுத்து கீழடி போன்ற இடங்களில் நடக்கும் ஆய்வுகளுக்கு முட்டுக்கட்டை போடுகிறார்கள். - இப்படி நீண்ட பட்டியலிட முடியும்!

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# கழகப் பொறுப்பாளர்கள் இரண்டாம் கட்டப் பயணம்: தோழர்களுடன் சந்திப்பு

*இரண்டாம் கட்டப் பயணமாக, 23,24, 25.11.2021 ஆகிய தேதிகளில், கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன், தலைமைக்குழு உறுப்பினர் அய்யனார், திருப்பூர் அய்யப்பன் ஆகியோர், மாவட்ட கழகப் பொறுப்பாளர்கள் மற்றும் தோழர்களிடத்தில் கலந்துரையாடினர்.*

**திண்டுக்கல் :** 23.11.2021 காலை 11 மணியளவில் திண்டுக்கல் மாவட்டம் பழனி பேருந்து நிலையம் அருகில் உள்ள வேலன் விடுதியில் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட அமைப்பாளர் மருதமூர்த்தி, பெரியார் செல்வம் உள்ளிட்ட மாவட்ட கழகத் தோழர்கள் பங்கேற்றனர். நிகழ்கால அரசியல் செயல்பாடுகள், கழக ஏடுகளுக்கு சந்தா சேர்த்தல், எதிர்வரும் காலங்களில் இயக்க செயல்பாடுகள் குறித்து விரிவாகப் பேசப்பட்டது. மதிய உணவு பழனி கழக தோழர்களால் வழங்கப்பட்டது.

**மடத்துக்குளம் :** மாலை 4 மணியளவில் திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் மோகன் இல்லத்தில் தோழர்கள் சந்திப்பு நடைபெற்றது. அப்பகுதியைச் சார்ந்த சிவானந்தம், இராசேந்திரன், கணக்கன் மற்றும் மடத்துக்குளம் மோகன் இணையர் ஜோதி ஆகியோர் பங்கேற்றனர். கூட்டத்தில் பங்கேற்றத் தோழர்கள் மறைந்த தலைமைக்குழு உறுப்பினர் மோகன் அவர்களின் இயக்கப் பணிகள் குறித்தும் அவர் விட்டுச் சென்றப் பணியை தொடர்வோம் என்றும் கூறினர்.

**பொள்ளாச்சி (ஆணைமலை) :** மாலை 6 மணியளவில், கோவை மாவட்டம் ஆணைமலை ஜெ.எம் விடுதியில் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் தோழர்கள் வெள்ளிங்கிரி, அரிதாஸ், ஆனந்த், உள்ளிட்ட 20 க்கும் மேற்பட்டத் தோழர்கள் பங்கேற்றனர். வரும் வருடம் ஆணைமலை பகுதியில் 300 பெரியார் முழக்க சந்தாக்களை தருவதாக உறுதியளித்தனர். இரவு உணவு, இரவு தங்குவதற்கு, காலை உணவு அனைத்திற்கும் மாவட்ட பொறுப்பாளர்கள் ஏற்பாடு செய்தனர்.

**கோவை மாநகரம் :** 24.11.2021 அன்று காலை 11 மணியளவில் கோவையில் நிர்மல் குமார் இல்லத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது. கலந்துரையாடலில், மேட்டுப்பாளையம் பா.இராமச்சந்திரன், நிர்மல்குமார், நேருதாஸ், வெங்கட் உள்ளிட்டத் தோழர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக ஈரோடு மண்டலத் திராவிடர் கழக மறைந்த பிரகலாதனுக்குத் தோழர்கள் அனைவரும் ஒரு நிமிடம் அஞ்சலி செலுத்தினர். பின் கலந்துரையாடல் தொடங்கியது. பயண குழுவினர் பயணத்தின் நோக்கத்தினை விளக்கி பேசிய பின், நிர்மல் குமார் பேசும் போது, “கோவை மாவட்டத்தின் பல்வேறு இயக்க செயல்பாடுகளை நினைவு கூறியதுடன் நாங்கள் 300 க்கு மேல் பெரியார் முழக்கம் சந்தாக்களை சேர்த்து விட்டதாகவும் மீதம் உள்ள சந்தாக்களை சேர்த்து விரைவில் தருவதாக” உறுதியளித்தார். தோழர்களுக்கு மதிய உணவு நிர்மல் ஏற்பாடு செய்தார்.

**திருப்பூர் :** இரவு 7 மணியளவில் திருப்பூர் மாவட்டம், அறிவியல் மன்றத் தலைவர் ஆசியரியர் சிவகாமி இல்லத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது. கலந்துரையாடலில் முகில்இராசு, ஆசிரியர் சிவகாமி, சங்கீதா, முத்துக்குமார், தனபால், சந்தோஷ் உள்ளிட்ட பல தோழர்கள் பங்கேற்றனர். கலந்துரையாடலில் கழக ஏடுகளுக்கு சந்தா சேர்த்தல், அறிவியல் மன்றம், மாணவர் கழக செயல்பாடுகள் குறித்து பேசப்பட்டது. தோழர்களுக்கு இரவு உணவு முகில்இராசு ஏற்பாடு செய்தார்.

**திருச்செங்கோடு :** 25.11.2021 அன்று நாமக்கல் மாவட்டம் திருச்செங் கோட்டில் தம்பி தேநீர் விடுதி சோமசுந்தரம் இல்லத்தில் காலை 11 மணியளவில் கலந்துரையாடல் நடைபெற்றது. கூட்டத்தில், முத்துப்பாண்டி, சரவணன், சோமசுந்தரம், பெரியண்ணன், பூபதி உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். கழக ஏடுகளுக்கு சந்தா சேர்ப்பது, அடுத்தகட்ட இயக்க செயல்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டது. மதிய உணவு தோழர் சோமசுந்தரம் ஏற்பாடு செய்தார். பயணக் குழு வழி செலவுக்கு ரூ .1000 மாவட்ட கழகம் சார்பாக வழங்கப்பட்டது. தொடர்ந்து மாலை 4 மணியளவில் நாமக்கல் மாவட்டத் தலைவர் குமாரபாளையம் சாமிநாதனை சந்தித்து பயண நோக்கம் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது.

**கோபி :** மாலை 6 மணியளவில் ஈரோடு வடக்கு மாவட்டம் கோபியில் லா கள்ளிப்பட்டி தோழர் நிவாஸ் இல்லத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது. தோழர்கள் நாத்திகஜோதி, வேனுகோபால், மா.நிவாஸ், கோபி வேலுச்சாமி, உள்ளிட்ட பல தோழர்கள் கலந்து கொண்டனர். இரவு உணவு நிவாஸ் ஏற்பாடு செய்தார். பயண செலவிற்கு ரூ.1000 மாவட்ட கழகம் சார்பில் வழங்கப்பட்டது. இத்துடன் இரண்டாம் கட்ட பயணம் நிறைவுப் பெற்றது.

**பயணத்தில் : 1) புரட்சிப் பெரியார் முழக்க வளர்ச்சி நிதியாக நாமக்கல் மாவட்ட பொறுப்பாளர்கள் ரூ - 10000 கழக பொருளாளர் திருப்பூர் துரைசாமி அவர்களிடம் வழங்கினர்.** 2) புரட்சிப் பெரியார் முழக்கத்திற்கு சந்தா சேர்ப்பதுடன் முழக்கத்திற்கான வாசகர் வட்டத்தை நடத்தவும் தோழர்கள் கருத்து தெரிவித்தனர். 3) ஜாதியைப் பாதுகாக்கும் இந்திய அரசியல் சட்ட எரிப்பு போராட்ட வரலாறுகளைப் பற்றி அனைவராலும் புரிந்து கொள்ளும் வகையில் ஒரு சிறிய வெளியீடு கொண்டு வர வேண்டும் என்றும் தோழர்கள் கருத்து தெரிவித்தனர்.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் சுயாட்சி பேசினார்கள்; காங்கிரசும் அதைப் பேசியது; பிறகு சுதந்திர இநதியாவில் அரசியல் சட்டத்தில் சுயாட்சி கொள்கை களை கை கழுவினார்கள். காங்கிரஸ் ஆட்சியில் தமிழ்நாட்டு உரிமைகள் பறிக்கப் பட்டது என்றால் பா.ஜ.க. ஆட்சியில் தமிழ்நாடு தமிழர்கள் அடையாளமே ஒழிக்கப்படும் முயற்சிகள் சட்டங்களாக அதிகாரங்களுடன் படை எடுத்து வருகின்றன. ஒற்றை இந்தியா என்ற பெயரில் உருவாகி வரும் பார்ப்பனிய இராமராஜ்யத்துக்குள் தமிழ்நாடு மூழ்கிவிடுமா? இல்லை உரிமைகளுக்கான போராட்டங்கள் வழியாக தமிழர்கள் தங்கள் உரிமைகளை, அடையாளங்களை மீட்டெடுப்பார்களா என்ற கேள்வி தமிழர்கள் முன் நிற்கிறது.

**(நிறைவு)**

# ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்துக்கு சேலம் மாவட்டக் கழகங்கள் சார்பாக 1500 சந்தாக்கள் வழங்க முடிவு

26.11.2021 சனிக்கிழமை மதியம் 02.00 மணியளவில் திராவிடர் விடுதலைக் கழக ஒருங்கிணைந்த சேலம் கிழக்கு - மேற்கு மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் மேட்டூர் தாய்த்தமிழ் தொடக்கப் பள்ளியில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையிலும், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலையிலும் நடைபெற்றது.

சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் சி.கோவிந்தராசு வரவேற்பு மற்றும் கடவுள் மறுப்பு கூற கூட்டம் தொடங்கியது.

கூட்டத்தில் அனைத்துக் கிளைக் கழகப் பகுதிப் பொறுப்பாளர்களும், இயக்க வளர்ச்சி குறித்தும், 2022ஆம் ஆண்டு சந்தா சேர்ப்பு குறித்தும் தங்களது கருத்துக்களை பதிவு செய்தனர். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

- 09.11.2021 அன்று இயற்கை எய்திய திராவிடர் கழக மண்டல தலைவர் தோழர் பிரகலாதன் அவர்களின் மறைவிற்கு சேலம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.
- 2022ஆம் ஆண்டிற்கான புரட்சி பெரியார் முழக்க சந்தாக்கலாக சேலம் கிழக்கு மாவட்டத்தின் சார்பாக 500 சந்தாக்களும், சேலம் மேற்கு மாவட்டத்தின் சார்பாக 1000 சந்தாக்களும் சேர்ப்பதாக முடிவு செய்யப்பட்டது.
- சேலம் கிழக்கு - மேற்கு மாவட்ட பொறுப்பாளர்கள் ஒரு குழுவாக இணைந்து இயக்க குடும்பங்களை அவர்கள் இல்லத்திற்கே சென்று சந்தித்து கலந்துரையாடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

கலந்துரையாடல் கூட்டத்தில் 60க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

நிறைவாக சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் டேவிட் நன்றி கூற கலந்துரையாடல் கூட்டம் மாலை 4.00 மணியளவில் நிறைவடைந்தது.

# ஈரோடு சித்தோட்டில் கழகம் எடுத்த ஜாதி மறுப்பு இணையர் சந்திப்பு; கருத்தரங்கு

திராவிடர் விடுதலைக் கழகம் ஈரோடு தெற்கு மாவட்டத்தின் சார்பாக நவம்பர் 26 அன்று சட்ட எரிப்புப் போராட்டம் -ஜாதி ஒழிப்பு ஈகியர் கருத்தரங்கு, ஜாதி மறுப்பு இணையர்கள் சந்திப்பு மற்றும் மாவட்ட கழக அலுவலகம் திறப்பு ஆகிய மூன்று நிகழ்வுகள் சித்தோட்டில் வெகு சிறப்பாக நடத்தப்பட்டது.

மாலை 4 மணிக்கு தொடங்கிய இந்நிகழ்வுக்கு கழகத்தின் அமைப்புச் செயலாளர் ப. இரத்தினசாமி தலைமை வகித்தார். மாவட்ட அமைப்பாளர் பெ.கிருஷ்ணமூர்த்தி வரவேற்புரைக்குப்பின் மாநில பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன் உரையைத் தொடர்ந்து, மூத்த வழக்கறிஞர் ப பா. மோகன் (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி), திராவிடர் விடுதலைக் கழகத்துக்கான மாவட்ட அலுவலகத்தைத் திறந்து வைத்து, அறிவியல், பொதுவுடைமைச் சித்தாந்தம், பெரியாரியம் ஆகியவனப் பற்றிய செய்திகளை முன் வைத்து உரையாற்றினார்.

இறுதியாக கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி, வரலாற்றுச் செய்திகளை நினைவுகூர்ந்து உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் யாழ். எழிலன் நன்றி கூறினார்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல், திருப்பூர், ஈரோடு வடக்கு, காவலாண்டியூர் என அனைத்துப் பகுதிகளிலிருந்தும் தோழர்கள் வருகை புரிந்து பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

ஈரோடு தெற்கு மாவட்டத் தோழர்கள் மாவட்டத் தலைவர் செல்வராஜ், பொருளாளர் கிருஷ்ணன், மணிமேகலை, விருதுநகர் செந்தில், மாநகரத் தலைவர் குமார், சத்தியமூர்த்தி, மாநகரச் செயலாளர் திருமுருகன், கணேசன், சித்தோடு கமலக்கண்ணன், சி.எம். நகர் பிரபு, பெருமாள்மலை ராசண்ணன், முருகன், விஜயரத்தினம், சென்னிமலை கோபிநாத், பெருந்துறை பழனிச்சாமி மற்றும் ஆதரவாளர்களும் பெருந்திரளாய் பங்கேற்றனர். விழாவின் முடிவில் அனைவருக்கும் சிறப்பான முறையில் உணவு வழங்கப்பட்டது.

**செய்தி : எழில்**

## அ.பி. அறிவுமதி ரூ.10,000/- நன்கொடை

ஈரோடு கொங்கம்பாளையம் பிரகாஷ் -அமுதா இணையரின் மகன் அ.பி. அறிவுமதி, தனது முதல் மாத சம்பளமான ரூ.10,000/-ஐ கழக வளர்ச்சி நிதியாக 26.11.2021 அன்று மாலை சித்தோட்டில் அரசியல் சட்ட எரிப்பு போராட்ட நாள் கருத்தரங்கில் கழகத் தலைவரிடம் வழங்கினார்.

## நாத்திக ஜோதி மகேசுவரி ரூ.5,000/- நன்கொடை

ஈரோடு வடக்கு மாவட்ட தி.வி.க. தலைவர் ஜோதி முருகன் என்கிற க. நாத்திகஜோதி மகேசுவரி, 39ஆவது திருமண நாள் மகிழ்வாக கழக வளர்ச்சிக்கு ரூ.5000/- நன்கொடை வழங்கினார்.

(நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 02nd December 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN